மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. | Madras : June 1903. | No. 2.
புத்தகம் ரு. | சென்னப்பட்டணம், 1903ஹு ஜூன்மீ | இல. உ.

மகாராஜாவே! அவள் என்னை மணம்புரிய சம்மதித்துவிட்டாள், தங்கள் உத்திரவு வேண்டுமென்று சொன்னவுடன் இராஜன் மிகச்சந்தோஷப்பட்டு தன் மனைவியிடத்திற்குச் சென்று நமது குழந்தை இராணுவ மந்திரியை மணம்புரிய சம்மதித்தாளாம், நாம் பேசிய விஷயம் பலித்துவிட்டது, இது ஈசுவர சங்கல்பம் தானென்று சொல்லிக்கொண்டு இருவரும் வெளிவந்தார்கள்.

இராஜன், வெகுசந்தோஷம்! அவள் சம்மதம் போதுமானது, ஈசுவரன் உங்களுக்கு தீர்க்க ஆயுளை யளித்து சுகமளிப்பாராக, அவள் தக்க கணவனைத் தேடிக்கொண்டாள். இவ்விஷயத்தில் எனக்கு திருப்திதான் என்று சொல்லும் பொழுதே இராஜகுமாரத்தி கிளி ஒருகையிலும் மற்றொரு கையில் நாலு ஐந்து ரோஜா புஷ்பங்களை எடுத்துக் கொண்டு வந்து தான் வகிக்கப்போகும் கணவருக்கு ஒன்றும் தாயாருக்கு ஒன்றும் தகப்பனாருக்கு ஒன்றுமாகக் கொடுத்து சந்தோஷமாகக் கிளியுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள்.

உடனே இராஜன் இராணுவ மந்திரியை தன் வீட்டில் அன்றைய தினம் போஜன முண்ணும்படி கேட்டான்; அவனும் சம்மதித்து யாவரும் போஜன முண்டார்கள். பின்பு இராஜா பிரதான மந்திரியை வரவழைத்து தனது குமாரத்திக்கும் இராணுவ மந்திரிக்கும் அடுத்தவாரம் திங்கட்கிழமை விவாகமுகூர்த்தம், விவாகத்திற்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தும்படி உத்திரவு அளிக்கவே, மந்திரி அவ்விதமே செய்வித்தான். இராஜா வீட்டு கலியாணத்திற்கு கேட்கவேண்டுமா, சிலவோ அதிகம்; தெருக்களிலெல்லாம் முத்தால் தோரணங்கள் கட்டப்பட்டன. பெரிய பந்தல்கள் போடப்பட்டன; பந்தல்கால்களுக்கு இரத்தினங்க ளிழைக்கப்பட்டிருந்தன; வாத்தியங்களோ தினுசு தினுசாக வந்திருந்தன; பல தேசத்திலிருந்து மன்னர்களும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். இவர்களெல்லாம் தங்கியிருக்க விசாலமான விடுதிகளும் தயார்செய்யப்பட்டன.

இந்த இராஜ குமாரத்தி அநேகரை எனக்கு வேண்டாம் வேண்டாமென்று நீக்கிய அரசர்களுக்கு இந்த புதிய மாப்பிள்ளையின் மேல் வெறுப்பிருந்த போதிலும் இவனுடைய பெரிய அந்தஸ்திற்கும் இவன் குணத்திற்கும் அஞ்சி யாவரும் விவாகத்திற்கு வந்து காலத்தைச் சந்தோஷமாக சழித்தார்கள். விவாகமோ வெகு விமரிசையாக நடந்தது; தானதர்மங்களோ அளவிடக்கூடாமல் செய்யப்பட்டன. பாண வேடிக்கையும் சங்கீதக் கச்சேரியும் வெகுநன்றாக நடந்தன, பின்பு தம்பதிகள் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இராணுவமந்திரியின் தாயாருக்கோ சந்தோஷமாச்சுது. மருமகளை வெகு பிரியத்துடன் நடத்தி வந்தாள்.

இவ்விதம் வாழ்ந்து வரும் நாளில் இந்த இராஜனுடைய மைத்துனன் இறந்து போய்விட்டான். அவனுக்கு புத்திரனுமில்லை, புத்திரியுமில்லை. உடனே வேறு தேசத்து இராஜன் யுக்தத்திற்கு வந்து இந்த தேசத்தைப்பிடித்துக் கொண்டதாக இந்த இராஜனுக்கு சங்கதி வந்தது. உடனே மருமகனாகிய இராணுவ மந்திரி நான் சென்று இராஜியத்தை கைவசமாக்கிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு திரண்ட சேனைகளுடன் அங்கு சென்று அந்தப் புதிய இராஜனுடன் அகோர யுத்தம் 3 நாள் செய்து அவனைத் தோற்கடித்தான். அவன் பயந்து தப்பிப்பிழைத்தோம் என்று எண்ணிக் கொண்டு ஓடிப்போய் விட்டான். இவன் இராஜியத்தை சரிவர சீர்படுத்தி விட்டு தன்மாமனார் இராஜியத்திற்கு வெகு சந்தோஷத்துடன் சென்று ஜயக் கொடியை நாட்டினான். இராஜாமகிழ்ந்து அந்த இராஜியத்தையும் தனது இராஜியத்தையும் இவனுக்குக் கொடுத்து இவனுக்குப் பட்டாபிஷேகமும் செய்வித்தான்.

இவன் தருமம் வழுவாமல் இராஜிய பரிபாலனம் செய்துக் கொண்டு வந்தான். இவனுக்கும் ஒரு புத்திரனும் புத்திரியும் ஜனித்தார்கள், யாவரும் புத்திர சந்தான முண்டானதைப் பற்றியும் தங்களுக்குத் தகுந்த இராஜன் அமைந்து நீதிவழுவாமல் இராஜிய பரிபாலனம் செய்து வருவதைப்பற்றியும் மகிழ்ந்து இராஜனையும் இராணியையும் வாழ்த்திக்கொண்டேயிருந்தார்கள்.

ஒருநாள் உல்லாசமாய் பூந்தோட்டத்தில் புதிய இராஜனும் இராணியும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இராணி தன் கணவனைப்பார்த்து இந்தக் கிளிக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்றாள். அவரும் அதற்கென்ன நாளைய தினம் ஒரு பஞ்சவர்ண ஆண் கிளியைத்தரு

விக்கிறேன் என்றான், இராணி சரி, அது அடிமைக்கிளியாக விருக்குமோ என்று வேடிக்கையாகக் கேட்டாள். இராஜன் புன் சிரிப்பு சிரித்து இராஜக்கிளி யாகத்தானிருக்கும் என்றான்.

தாங்கள் ஒரு சமயத்தில் என்னிடத்தில் "கனவோ நினைவோ" என்று எண்ணினேன் என்று சொன்னீர்களே, ஞாபகமிருக்கிறதா, வென்றாள். இராஜன் ஆம் ஞாபக மிருக்கிறது அது கனவல்ல; நினைவுதான் என்று சிரித்துக் கொண்டு சொல்லிவிட்டு இருவரும் சந்தோஷமாக உட்சென்றார்கள்.

இவர்கள் வெகு வருஷம் சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

(முற்றிற்று.) C. S. R.

ராணிபவானி.

I.

வங்காள இராஜதானியானது மகம்மதியருடைய ஆளுகையிலிருந்த போது, சுதேச இராஜாக்களும் தங்கள் தங்கள் இராஜ ஜியத்தை அரசாண்டு வந்தார்கள். இவர்கள் அதிக பராக்கிரம முள்ளவர்கள். இவர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் அரசாட்சி செய்து வந்தார்கள். வங்காள இராஜதானிக்கு முக்கிய பட்டணமாகிய மூர்ஷிடாபாத்தில் நவாப் வசித்துக் கொண்டு "இப்பொழுது கவர்னர் எவ்விதம் இராஜ்ஜிய பரிபாலனம் செய்து வருகிறாரோ அவ்விதமே" இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து வந்தார். சிற்றரசர்களாகிய சுதேச இராஜாக்கள் வருஷா வருஷம் தங்கள் கப்பங்களை நவாப்பு அவர்களுக்குக் கட்டிக்கொண்டு வந்தார்கள். இச்சிற்றரசர்களில் எவராவது தங்கள் கப்பங்களைக் கட்டத்தவறினால், நவாப்பு அவர்கள் தங்கள் இராணுவ உத்தியோகஸ்தர்களை அவர்களிடம் அனுப்பி கப்பத்தை வசூல்செய்தும், இனிமரியாதையாக கப்பம்கட்ட வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லும்படியும் கட்டளையிட்டுவருவது வழக்கம். இப்படியிருக்குங் காலத்தில் சென்ற நூற்றாண்டின் கடைசியில் மகம்மதியருடைய அரசாட்சியின் பலம் குறைந்து போகவே, இந்தியாவின் பிரதான சக்கிரவர்த்தியாக டெல்ஹியில் ஆண்டு வந்த சக்கா

வர்த்திக்கு ஒருவரும் பயப்படவில்லை. இவர் பேருக்கு மாத்திரம் சக்கிர வர்த்தி என்ற பெயரைப் பெற்றிருந்தார். சிற்றரசர்கள் சுதேச்சையாய் தங்கள் இராஜ்ஜியத்தை ஆளத்தலைப்பட்டார்கள். அதனால் மகமதியர்க ளுடைய பராக்கிரமும், சக்கிரவர்த்தி என்கிற மதிப்பும் போய்விட்டது. இவர் களுக்குள் அடங்கி அரசுபுரியும் இராஜாக்களும் இவர்களுக்கு அடங்காமல் தங்கள் தங்களுடைய தேசங்களை தங்களிஷ்டப்பிரகாரம் அரசுபுரிய தலைப் பட்டு கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் இவர்களுக்கு அபகீர்த்தி யுண்டானது மல்லாமல், இவர்களுடைய தேசங்களும் பலவீனமடைய ஆரம் பித்தன. மகமதிய ஆளுகையில் கடைசியாக வங்காள இராஜதானியை அரசுபுரிந்தவர் ஆல்வர்டிகான் என்பவர். இவர் அதிக பராக்கிரமசாலி; ஆகி லும் இவருடைய ஆளுகையில் சண்டை அதிகரித்தே யிருந்தது. இவர் தன்னுடைய பேரனை சுராஜிடௌலா என்ற சிறுவனை நவாபாக ஏற்படுத்தி விட்டு கி. பி. 1756ம் வருஷம் இறந்துபோய் விட்டார். அப்பொழுது சுராஜிடௌலா பதினெட்டு வயதுடையவராயிருந்தார். இவர்காலத்தில் இவ ராளுகையின் கீழடங்கிய நான்கு பராக்கிரமமுள்ள சுதேச இராஜாக்கள் இருந்தார்கள். கிருஷ்ணநகர் இராஜாவாகிய கிருஷ்ண சந்திரர் ஒருவரும், தெக்கணத்து இராஜாவாகிய இராஜ ராஜவலலபர் என்பவரும் பாடலிபுரத் திற்கு (Patna) இராஜாவாகிய இராஜாராய் தூர்லவர் என்பவரும், நாட்டூருக்கு இராணியும் உத்தமஸ்திரீயுமாகிய ராணிபவானி என்கிற நால்வருமே. இந் நால்வரும் இராஜ்ஜிய பாரஞ்செய்வதில் வல்லமையுள்ளவர்களாகவும், அநு பவமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இவர்களைப்போலவே சுராஜிடௌலா வின் சேனைத்தலைவராகிய மிபராஜாபர் என்பவரும், தனவந்தராகிய ஜகதசத் என்பவரும் அக்காலத்தில் அதிக திரமையுள்ளவர்களாகவும், அநுபவமுள்ள வர்களாகவும் இருந்தார்கள். இந்த ஆறு பேர்களுந்தான் கடைசியாக வங் காள இராஜதானியை இங்கிலீஷ்காரர் வசம் ஒப்புவித்தார்கள். இது நிற்க:— மேற்சொல்லியவர்களில் ஒருவரும் நாட்டூர் இராணியாராகிய ராணிபவானி அம்மாள் என்கிற உத்தமஸ்திரீயின் சரித்திரத்தை எழுதுகிறோம். நாட்டூர் தேசத்தின் வருஷவரும்படி ஒன்றரைக்கோடி ரூபாய். இதில் நவாபுக்கு வருடந்தோறும் கட்டவேண்டிய பகுதி ரூபாய் ஐம்பத்திரண்டுலக்ஷம். மிகுதி ரூபாயைக்கொண்டு ஐம்பதாயிரம் காலாட்படைகளையும், குதிரைப் படைகளையும் போஷித்து மிகுந்ததை இராஜ்ஜிய பொக்கிஷத்தில் சேர்த்துக் கொண்டு வருவார்கள்.